IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 243 of 2022 |
| Deposition of witness for | : | PW3 |
| Name | : | வெங்கடேசன் |
| Father's Name | : | சென்னையா செட்டி |
| Village | : | பருகூர் |
| Taluk | : | பருகூர் |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | ஜவுளி வியாபாரம் |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 29th day of April 2026.
எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது பர்கூரில் குடியிருந்து வருகிறேன். நான் விபத்து சமயத்தில் 2006 ல் ஸ்ரீ கிருஷ்ணா கிரானைட் கம்பெனியில் வேலை பார்த்து வந்தேன். தற்போது ஜவுளி வியாபரம் செய்து வருகிறேன். அ.ச.ஆ.1 தெரியும். விபத்து இறந்து போன டேவிட் என்பவர் எனக்கு தெரியும் அவர் ஸ்ரீ கிருஷ்ணா கிரானைட் கம்பெனியில் வேலை செய்து வேலை செய்து வந்தார். காலை 6.30 மணிக்கு செந்தரபள்ளி வந்திருந்தேன். நான் அங்கு டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன் அவரும் டீ கடைக்கு வரும்பொழுது ரோடை கடந்து செல்லும் போது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தை ஒட்டி வந்த நபரை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரி தான் இரு சக்கர வாகனம் ஒட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவர். அதன் பிறகு ஒனர்க்கு தகவல் கொடுக்க மேனஜர்யிடம் சென்னேன். அவருக்கு தலையிலும் வாயிலும் அடிப்பட்டு இரத்தம் வந்தது. ஒனர் தான் பர்கூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிக் கொண்டு போனார். அதன்பிறகு தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஒரு வாரத்திற்கு மேல் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு இறந்து விட்டதாக தகவல் கிடைத்தது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் தற்போது பர்கூரில் குடியிருந்து வருகிறேன். என்ஜினியரிங் படித்து உள்ளேன். நான் சம்பவம் நடக்கும் போது எங்கு இருந்தேன் என்றால் 7.00 மணிக்கு கம்பெனியில் வேலை ஆரம்பிக்கும் 6.30 மணிக்கு டீ சாப்பிட்டு கொண்டியிருந்தேன். 27.11.2006-ல் சம்பவம் 6.30 மணிக்கு நடந்தது கிழமை தெரியாது. நான் வழக்கமாக இரு சக்கர வாகனத்தில் ஜெகதேவி வழியாக வருவேன். நான் டீ சாப்பிட்டு கொண்டியிருக்கும் போது அவர் சாலையை கடந்தார். கடையில் எங்களை தவிர மற்ற நபர்களும் இருந்தார்கள் ஐந்து பேர் இருந்திருப்பார்கள். எதிரிக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்த நபர்கள் ராமசந்திரன், சின்னு ஆகியோர்கள் தெரியும். அவர்கள் கர்நாடக மாநிலத்தில் சேர்ந்தவர்கள். அவர்களும் ஸ்ரீ கிருஷ்ணா கம்பெனியில் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் சொந்காரர்களா இல்லையா என்று தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் 4001 என்பது மட்டும் தெரியும். Star City வாகனம் ஆகும் கலர் ஞாபகம் இல்லை. ஒரே கம்பெனியில் வேலை செய்ததால் அவருக்கு ஆதரவாகவும் இழப்பீடு பெறுவதற்காகவும் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரே கம்பெனியில் வேலை செய்யும் பொழுது நான் இடத்தில் இருந்திருந்தால் அவரை கூட்டிசென்றிருக்க வேண்டுமென்றாலும் நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. கம்பெனியின் உரிமையாளர் சொன்னதன் அடிபடையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அடிப்பட்ட நபரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை குவாரிக்கு வந்தார்கள் அன்று மதியத்திற்கு மேல் வந்து வாக்குமூலம் பெற்றார்கள். காலை வேலை நேரம் 7.00 மணிக்கு தொடங்கும் 5.30 மணிக்கு முடியும்.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

Digitally signed by M SANTHI

மறு விசாரணை :-

இல்லை.

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.